**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 207/2018 P.W. 8/L.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சாமுவேல் ( உதவி ஆய்வாளர்) | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 30.09.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது காவல்துறையில் பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். இதற்கு முன்பு நான் மண்டைக்காடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது 29.10.2016 ம் தேதி நிலையப்பொறுப்பிலிருக்கும் போது குளச்சல் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற இன்றிமேசன் படி மேற்படி மருத்துவமனை சென்று இன்றிமேசனைப்பெற்று அங்கு சிகிட்சையிலிருந்த மணவாளக்குறிச்சி அஞ்சல், பானான்விளையைச்சேர்ந்த செல்லைய்யா நாடார் மகன் தங்கமணி என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று 12.00 மணிக்கு நிலையம் வந்து காவல்நிலையக்குற்ற எண். 185/2016 சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 325, 506 பத்தி இரண்டு இ.த.ச 1860 கீழ் வழக்குப்பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவையும் கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக உதவி

ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

1. நான் மருத்துவமனையில் சென்று புகார் வாங்க சென்றபோது புகார்தாரர் சுயநினைவில் இருந்தார் என்றால் சரிதான். புகார் மனுவினை அவரே எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். புகார் மனுவின் 2 வது பக்கத்தில் 10 வது வரியில் முன்பல் கழந்துவிட்டது என்பதை வெட்டி உடைந்துவிட்டது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஓட்டி வந்ததாக சொல்லப்படும் வாகனத்தின் எண் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. குற்றம் சுமத்தப்பட்ட நபர் அவராகவே வாகனத்தின் கீழே விழுந்துவிட்டதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் - ஆம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது லெட்சுமிபுரம் கல்லூரியிலிருந்து பருத்திவிளை பள்ளி வரைக்கும் குளச்சல் காவல்நிலையத்திற்குட்பட்ட பகுதி என்றால் சரிதான். சம்பவயிடமானது குளச்சல் காவல்நிலையத்திற்குட்பட்ட பகுதி என்றால் சரிதான். ரோடு மண்டைக்காட்டிற்குட்பட்ட பகுதி.

3. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது எங்கள் காவல்நிலையத்திலிருந்து அரை கி.மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சம்பவயிடத்திலிருந்து வாகனத்தில் வருவது என்றால் ஒரு 5 நிமிடத்தில் நிலையம் வந்துவிடலாம் என்றால் சரிதான்.

4. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கையானது பதிவுச் செய்யப்படவில்லை என்றாலும், பின் ஆலோசனையிட்டு மேற்படி புகார் வாக்குமூலம் உற்பத்திச் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.